1990 மே 10]

வாய்ப்பளிக்கிறவகையில் உரிய முறையில் நிலைமைகள் மாற்றியமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை நான் இந்த அவையில் கேள்வி கேட்ட உறுப்பினருக்கும், அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி, அதைக்கேட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதன் மூலம் வேறு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பில்லாமல் போகும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள திருத்தலத்தை சுற்றுலா மையமாக்குதல்.

* *3498* திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளதிருத்தலத்தை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தகிரீஸ் வரர் ஆலயம் அமைந்துள்ள தீர்த்தகிரிமலையை மாவட்ட உலாத் தலமாக தேர்தெடுத்து அதன் மேம்பாட்டு பணிகளுக்காக ரூ. 4·00 இலட்சம் இதுகாறும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் என்பது தருமபுரி மாவட்டத் தில் மிகப் புகழ்பெற்ற ஒரு ஆலயம். அந்த தீர்த்தகிரி சுவாமி யைப் பார்க்க நம்முடைய மாண்புமிகு கந்தசாமி சுவாமி அவர்கள் இரவு 7 மணிக்கு நடக்க ஆரம்பித்து . . . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டத்தட்ட கந்தசாமி சுவாமி என்றே முடிவு செய்து விட்டீர்களா? (சிரிப்பு)

திரு. வ. முல்லைவேந்தன் : நடக்க ஆரம்பித்து 11 மணிக்குத் தான் கீழே இறங்கினார். அவ்வளவு கரடுமுரடான பாதைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த சுவாமி கோயிலுக்கு ஒரு மலைப்பாதை அமைக்கவேண்டுவதோடு, அங்கே ஒரு சுற்றுலா விடுதியும் கட்டித் தர அரசு முன் வருமா என்றும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் தருமபுரி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றபோது இரவு 8 மணிக்குத் தொடங்கி ஏறத்தாழ 10 மணி வரை அந்த மலையிலே

ஏறி, இறங்கினோம். அந்தப் பாதைகள், அங்கே கோயிலுக்கு மலை உச்சிக்குப் போகின்ற பாதை, மிகவும் கரடுமுரடாக இருந்தது. ஆகவே அதை செப்பனிடுவதற்கு அறநிலையத் துறை மூலமாக 'எஸ்டிமேட்' போடப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றது என்று நான் அறிகின்றேன். மிக முக்கியமான திருக்கோயில் அந்தப் பகுதியை அங்கே பல்வேறு பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்—சுற்றுலா மூலமாகவும் ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு தங்கும் விடுதி அங்கே மலை அடிவாரத்திலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடிக்கின்ற தருவாயிலே இருக்கிறது.

9–20 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை இப்படி கோவில்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், கல்விக் கண் திறப்பதற்காக அரூர் பகுதியிலே அறநிலையத் துறை மூலமாக ஒரு மகளிர் கல்லூரி உருவாக்கித்தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அந்தப் பகுதிக்கு பயணம் சென்றபோது இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய கல்வி அமைச்சர், அறநிலையத் துறை மூலமாக புதியதாகத் தொடங்கப்படுகின்ற கல்லூரிகளுக்கு மானியம் தருவதிலே போதிய சலுகைகள் தருவதாக இருந்தால் அறநிலையத் துறை மூலமாக தர்மபுரி மாவட்டத்திலே ஒரு கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

திருவண்ணாமலை நகரில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல்.

* 5105 திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை நகரில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா துறையின் பரிசீலனையில் உள்ளது.